சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS.49/2021**

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09ம் நாள் வியாழக்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.4** இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின் படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பரந்தாமன் | தொழில் | விவசாய கூலி |
| தந்தை பெயர் | சண்முகம் | ஜாதி | |
| கிராமம் | அத்திமலைப்பட்டு | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 47 |

**09.04.2026 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். வாதி, பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6ல் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். வா.சா.ஆ.6ல் உள்ள என் சாட்சி கையெழுத்து **வா.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது.